1995 நவம்பர் 3]

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம், திருநெல்வேலி-கட்டபொம்மன், காமராசர், சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நில வரித் தொகை 1 கோடியே 87 லட்சத்து 24 ஆயிரத்து 37 மற்றும் பைசா 34 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டிலே அடித்த புயல் காரணமாக தஞ்சாவூர் மாவட்டம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு பெரிய மாவட்டமாகும். அங்கே விவசாயிகளினுடைய தென்னை, வாழை, கரும்பு போன்ற பயிர்கள் அடியோடு அழிந்து, வீடுகளும் நாசமாயிற்று. அங்கு ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவாக இருந்தாலும், அவர்கள் சரியான பலனை அனுபவிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாலும், அவர்களால் கொடுக்கப்பட்ட லிஸ்ட்டை அரசு முழுமையாக ஏற்று, அதைப் பரிசிலனை செய்து, மீண்டும் ஒரு தொகை வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக தஞ்சை, திருவையாறு, ஒரத்தநாடு, கும்பகோணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வட்டமான திருவிடைமருதூர், வலங்கைமான், பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ.4,05, 22, 575.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

5—

காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவப் பணியாளர்கள் நியமித்தல்

*35952—**திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத் தலைமையிடம் காஞ்சிபுரத்தில் இருக்கும் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அரசு அறியுமா?

[1995 நவம்பர் 3

(ஆ) ஆம் எனில், மருத்துவர்கள், செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஒவ்வொரு ஆண்டும் உள் நோயாளிகள், வெளி நோயாளிகளினுடைய எண்ணிக்கை சற்றே அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. அவசியமேற்படின் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் மாற்றுப்பணிகள் மூலம் நியமிக்கப்படுவார்கள்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான உத்திரமேரூர், வாலாஜாபேட் பகுதிகளிலும் காஞ்சிபுரத்திற்கு அருகே இருக்கின்ற கிராமப் பகுதிகளிலேயும் இருக்கின்ற மக்கள், இன்னும் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற மக்களில் நிறைய பேர் புறநோயாளிகளாகவும், உள்நோயாளிகளாகவும் வருகை தருகின்ற காரணத்தால்—நோயாளிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால்—படுக்கை வசதிகளை இன்னும் அதிகம் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சென்னையிலிருந்து, காஞ்சிபுரம் தலைமையிடத்துக்குப் பக்கத்திலே லாரிகள், பஸ்கள் நிறைய செல்கின்றன; அந்தப் பகுதியிலே ஏதாவது விபத்துக்கள் நடைபெற்றால், அவர்களை காஞ்சிபுரத்திலே இருக்கின்ற அரசு மருத்துவமனைக்குத்தான் கொண்டுவருகிறார்கள். சமீபத்திலேகூட தீபாவளிக்கு முன்னாலே, காஞ்சிபுரத்திற்கு அருகே, தனியார் வெடி தயாரித்துக்கொண்டிருந்தபோது, வெடி விபத்து ஏற்பட்டது. அவர்களிலே ஒருவர் காஞ்சிபுரத்திற்கு வந்து சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களில் ஒரு நோயாளியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பரிந்துரை அடிப்படையிலே அங்கிருந்து சென்னையில் உள்ள கே.எம்.சி. மருத்துவமனைக்கு கொண்டு வந்ததற்கு பின்னர்தான் (மணி அடிக்கப்பெற்றது) அவருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்து, இன்றைக்கு உயிர் பெற்று இருக்கிறார். ஒருவனுக்கு தலையிலே அடிபட்டாலும்கூட ஸ்கேன் எடுக்கின்ற வசதி சென்னையிலேதான் இருக்கிறது. அதைப்போல, தலைநகரமாக இருக்கின்ற காஞ்சிபுரத்திலே உள்ள அந்த மருத்துவமனையிலே, அப்பேர்பட்ட வசதிளை செய்வதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

1995 நவம்பர் 3]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காஞ்சிபுரம் தலைமையிட மருத்துவமனையிலே 366 படுக்கைகள் இருக்கின்றன. தேவை என்றால், இன்னும் அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்பற்றி ஆய்வு செய்து, அவசியம் ஏற்படின் நடவடிக்கை எடுக்கலாம். அதேநேரத்திலே தேவையான, ஒரு மாவட்டத் தலைநகரத்திலே இருக்க வேண்டிய வசதிகள், அந்த மருத்துவமனைக்கு செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும்கூட, ஸ்கேன் போன்ற வசதிகளும் செய்யப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய எண்ணமாக இருக்கிறது. எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயும் ஸ்கேன் வரவேண்டும் என்று கருதினாலும், நிதிநிலையின் காரணமாக ஒரே நேரத்தில் அதைச் செய்ய இயலாது; படிப்படியாக ஒவ்வொரு மாவட்டமாக எதிர்காலத்தில் அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், தற்போது ஒரு மாவட்டத் தலைநகரத்திற்கு அவசியமான ஸ்டாண்டர்டு என்னவோ, அந்த நார்ம்ஸ்படி அந்த மருத்துவமனையிலே அனைத்தையும் அங்கே செய்து கொடுத்து இருக்கிறோம். எனவே கூடுதலாக என்ன தேவை என்பதை ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

6—

பெரியநாயக்கன்பாளையம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்

*39969—திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –

கோயம்புத்தூர், பெரியநாயக்கன்பாளையம் ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவமனையை விரிவுபடுத்தி படுக்கை வசதியை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏதுமில்லை.